இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 145 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மார்கழி 20 – ஞாயிற்றுக்கிழமை 04 ஜனவரி 2026 – திருச்சி ★ ★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 145 : Thiruvalluvar Year - 2056 - Margazhi 20 - Sunday 04 January 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00


## போதைப் பொருட்களையும், அதைவிட ஆபத்தான மதவாத அரசியல் போதையையும் தமிழ்நாட்டுக்குள் நுழைய விடாமல் தடுத்திட - நாமெல்லாம் ஒன்றுசேர வேண்டும்!

# அண்ணன் வைகோவின் நடைப்பயணம் புது எழுச்சியை உருவாக்கும்!

## வைகோவின் சமத்துவ நடைப் பயணத்தை திருச்சியில் தொடங்கிவைத்து – முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துரை!

**திருச்சி, ஜன.4-**

**“போதைப் பொருட்களையும் அதைவிட ஆபத்தான மதவாத அரசியல் போதையையும் தமிழ்நாட்டுக்குள் நுழையவிடாமல் தடுத்திட, நாமெல்லாம் ஒன்றுசேர வேண்டும்” எனவும் “அண்ணன் வைகோ அவர்களின் நடைப்பயணம் புது எழுச்சியை உருவாக்கும்” என்றும் வைகோவின் சமத்துவ நடைப்பயணத்தை தொடங்கி வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.1.2026) திருச்சியில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ அவர்களின் சமத்துவ நடைப் பயணத்தைத் தொடக்கி வைத்து ஆற்றிய உரை வருமாறு:-

தன்னுடைய பொது வாழ்க்கையில், தமிழ்நாட்டின் குறுக்கும் நெடுக்குமாக, தன்னுடைய காலடித்தடம் படாத இடமே இல்லை என்று சொல்லும் அளவிற்கு, மக்கள் பிரச்சினைகளுக்காக நடைப்பயணம் செய்தவர் நம்முடைய அருமை அண்ணன் வைகோ அவர்கள்!

**ஊக்கத்தையும் – உத்வேகத்தையும் இந்த வயதிலும் வைகோவிடம் பார்க்கிறோம்!**

அவருடைய நெஞ்சுரத்தையும் - ஸ்டாமினாவையும் பார்க்கும்போது, அவருக்கு 82 வயதா; இல்லை, 28 வயதா என்று ஆச்சரியப்படத் தோன்றுகிறது!

ஒரு இளைஞருக்குரிய வேகத்தையும் - ஊக்கத்தையும் உத்வேகத்தையும் இன்றைக்கு அவரிடம் நாமெல்லாம் பார்க்கிறோம். இளைஞர்களுக்கு நல்வழி காட்டிட, அதுவும் இளைஞர்களுடனே ஒன்று



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.1.2026) திருச்சிராப்பள்ளி, உழவர் சந்தை திடலில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் தலைமையிலான சமத்துவ நடைப்பயணத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் காதர் மொகிதீன், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக தலைமைக் கழக செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான துரை வைகோ, ம.தி.மு.க. அவைத் தலைவர் ஆடிட்டர் அர்ஜுன்ராஜ், திராவிடர் கழக பொதுச் செயலாளர் துரை சந்திரசேகரன், மக்கள் நீதி மய்யத்தின் பொதுச் செயலாளர் அருணாசலம், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயர், தோழமைக் கட்சிகளைச் சார்ந்த நிர்வாகிகள் மற்றும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சேர்ந்து இந்தச் சமத்துவ நடைப்பயணத்தைத் தொடங்கும் அண்ணன் வைகோ அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகள்! பாராட்டுகள்!

திராவிட இயக்கத்தைப் பொறுத்தவரைக்கும், காலந்தோறும் இளைய தலைமுறையினரின் நலனுக்காகவும் - எதிர்காலத்தின்நன்மைக்காகவும்-அவர்களின் வளர்ச்சிக்காகவும் செயலாற்றிக் கொண்டிருக்கும் இயக்கமாக, நமது இயக்கம் இருந்து கொண்டிருக்கிறது!

**95 வயதிலும் தளராமல் தொண்டு செய்தவர் பெரியார்!**

தள்ளாத 95 வயதில், தளராமல் தொண்டு செய்தவர் தந்தை பெரியார் அவர்கள்! தமிழ்நாட்டு இளைஞர்களுக்கும் பெண்களுக்கும், கல்வி உள்ளிட்ட அனைத்து உரிமைகளும் கிடைக்க வேண்டும்; அதற்கு, சாதி மதம் உள்ளிட்ட தடைகள் அகற்றப்பட வேண்டும்; தகர்க்கப்பட வேண்டும் என்று தன்னுடைய இறுதி மூச்சு வரை பாடுபட்டவர் தந்தை பெரியார் அவர்கள்.

அவர் வழிவந்த தலைவர் கலைஞர் அவர்கள், 80 ஆண்டு கால பொதுவாழ்க்கைக்குச் சொந்தமானவர்! சக்கர நாற்காலியில் உட்கார்ந்தவண்ணம், ஓய்வில்லாமல் உழைத்தார். 16 வயதில் மாணவநேசன் பத்திரிகையைத் தொடங்கி, இளைஞர்களுடன் உரையாடிய அவர், 89 வயதிலும் ஃபேஸ்புக் - ட்விட்டரில் இளைஞர்களுடன் அரசியல் பேசினார்.

## ஆன்மீகத்தை சில கும்பல்கள் வம்பு செய்யப் பயன்படுத்துகிறார்கள்!

**திராவிட இயக்க பல்கலைக்கழகத்தில் பயின்றவர்கள் நாங்கள்!**

அப்படிப்பட்ட திராவிட இயக்க பல்கலைக்கழகத்தில் படித்தவர்தான், அண்ணன் வைகோ அவர்கள். ஏன், இந்த ஸ்டாலினும் அதே பல்கலைக்கழக மாணவன்தான்!

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

---

## கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு முன்னிலை! கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமை!

# ஜன.19 - தி.மு.க. டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை! தலைமைக் கழகம் அறிவிப்பு!

**சென்னை, ஜன.4-**

**வருகிற 19.01.2026 திங்கட்கிழமை அன்று தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியில் முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றிட கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு முன்னிலையில் கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்கள் தலைமையில் “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” தி.மு.க. டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு நடைபெறுகிறது என தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.**

**இது தொடர்பான தலைமைக் கழக அறிவிப்பு வருமாறு:-**

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் மகளிர் மேம்பாட்டுக்கென தொடர்ச்சியான திட்டங்களை வகுத்து, 1.31 கோடி மகளிருக்கு ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை’, ‘விடியல் கட்டணமில்லா பேருந்துப் பயணம்’, கல்வி கற்கும் மாணவிகளுக்கு ‘புதுமைப் பெண் திட்டம்’, வேலைக்குச் செல்லும் மகளிருக்கு பாதுகாப்பான ‘தோழி விடுதி’, இந்தியாவிலேயே அதிக அளவாக 43 சதவீதம் வேலைக்குப் போகும் பெண்களைக் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்வதற்கான சூழல் என மகளிர் மேம்பாட்டுக்காக தொடர்ச்சியான திட்டங்களை வகுத்து வரும் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள், தலைமையில், கடந்த 29.12.2025 அன்று திருப்பூர் மாவட்டம், பல்லடத்தில், “பார் சிறுத்ததோ, படை பெருத்ததோ” என்று சொல்லத்தக்க வகையில், “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” தி.மு.க. மேற்கு மண்டல மகளிர் அணி மாநாடு கறுப்பு சிகப்பு மகளிர் அணி படையின் மாபெரும் எழுச்சியோடு வெற்றிகரமாக நடைபெற்றதைத் தொடர்ந்து;

**முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்** அவர்கள் சிறப்புரையாற்றிட – கழக முதன்மைச் செயலாளர் **கே.என்.நேரு** அவர்கள் முன்னிலையில், கழக துணைப் பொதுச் செயலாளர் **கனிமொழி கருணாநிதி எம்.பி.**, அவர்கள் தலைமையில்;

கழகப் பொதுச்செயலாளர் துரை முருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., துணைப் பொதுச்செயலாளர்கள் ஐ.பெரியசாமி, முனைவர் க.பொன்முடி, திருச்சி சிவா, எம்.பி., ஆ.இராசா, எம்.பி., அந்தியூர் ப.செல்வராஜ், எம்.பி., மு.பெ.சாமிநாதன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கழக மகளிர் அணித் தலைவர் விஜயா தாயன்பன், மகளிர் அணிச் செயலாளர் திருமதி ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி ஆகியோர் பங்கேற்பில்;

வருகிற **19.01.2026 திங்கட்கிழமை**, மாலை 4.00 மணி அளவில், தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியில் **“வெல்லும் தமிழ்ப் பெண்கள்” தி.மு.க. டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு** நடைபெற உள்ளது.

மாவட்டக் கழகச் செயலாளர்/பொறுப்பாளர்களான எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், எஸ்.எஸ்.சிவசங்கர், அன்பில் மகேஸ்பொய்யாமொழி, எஸ்.ரகுபதி, சி.வி.கணேசன், பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., காடுவெட்டி தியாகராஜன் எம்.எல்.ஏ., க.வைரமணி, க.அன்பழகன் எம்.எல்.ஏ, வீ.ஜெகதீசன், நிவேதா முருகன் எம்.எல்.ஏ., கே.கே.செல்லபாண்டியன், என்.கௌதமன், டி.பழனிவேல், அமைச்சர் பெருமக்களான கோவி. செழியன், சிவ.வீ.மெய்யநாதன், டி.ஆர்.பி.ராஜா - நாடாளுமன்ற உறுப்பினர்களான அருண்நேரு, எம்.பி., முரசொலி, எம்.பி., மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இம்மாநாட்டினை ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்வார்கள்.

நிறைவாக, தஞ்சாவூர் மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திர சேகரன், எம்.எல்.ஏ., நன்றியுரையாற்றுகிறார்.

இவ்வாறு தலைமைக் கழகம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.